முருகப்பெருமான் துணை

**மகான் பதஞ்சலியார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.12.2022, திங்கட்கிழமை

1. பாவங்கள் போக்கிக் காத்தருளவந்த
பரமஞானியே ஆறுமுக அரங்கனே
அவனியில் உன் பெருமை கூறி
அறிவிப்பேன் அனுகூல ஆசிதனை
2. ஆசிதனை சுபகிருது சிலை திங்கள்
அறிவிக்க சதுர்திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 04 ம் நாள் 19.12.2022, திங்கட்கிழமை)
ஆசிதனை பதஞ்சலியார் யானும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்தரும் தரும சக்கரமாக
ஞானியர் நடத்தும் அன்னதான
பலம்தரும் சேவை அறிந்து உலகோர்
பாருலகமெங்கும் செய்துவர
4. வருகவே எங்கும் தருமபலம்
வள்ளல் தன்மையாகப் பெருகி
முருகப்பெருமான் வெளிப்பாடாகி
முழுமை ஞானம் மக்களுக்கு
5. மக்களுக்கு ஆற்றலாகப் பரவி
மார்க்கமுடன் மேலவர் ஆசிபட
தேக்கமின்றி ஞானவான்கள் படை
தேசமெல்லாம் பரவி இனிதே
6. இனிதே உலக மாற்றமாக
எல்லாத் திக்கிலும் குருவருள்
கனிவேலன் வெளிப்பாடாகி
கலியுகம் ஞானயுகமாகத் தேற்றம்
7. தேற்றம் இனிதே அடையும்
தேசிகன் தொண்டர் சக்தி
ஆற்றலாக மாறி உலகினில்
ஆறுமுகக் கடவுள் படைப்பாக
8. ஆகவே அனைவரும் ஞானிகளாக
அரங்கனால் தேர்வு செய்யப்பட்டு
யுகமாற்றம் சடுதி காணும்
உலகினில் ஞானிகள் படைகள்
9. படைகளெல்லாம் இணைந்துமே
பலமாக அரங்கன் சக்தியுடன்
தடையின்றி கலந்து சேவை
தரணியெங்கிலும் நடத்திவர

10. வருகவே இந்தவித அதிசயம்
வடிவேலன் தலைமையில் நடக்க
தருமவான்களும் தவமாந்தர்களும்
தவராஜன் அவதாரம் தன்னை

11. தன்னை அறிந்தாலே போதும்
தானவர்கள் ஞானிகளாகி
மண்ணுலகம் காக்கப்படுமென்பேன்
மொழிந்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–